# ★ தமிழக அரசை கலைக்கக்கூடாதென ஆர்ப்பாட்டம்

(சென்னை)
தமிழக அரசை கலைக்கப் படக்கூடாதெனவும், இராணுவம் தமிழ் நாட்டுக்குள் வந்ததை ஆட்சேபித்தும், நேற்று அ. தி. மு. க. தொண்டர்கள் தமிழகத்தில் பெரும்
(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவ ஆண்டு 2023 மார்கழி 8 இதழ் 316
யாழ்ப்பாணம் புதன்கிழமை 23 – 12 – 1992

## சுப்பிரமணிய சுவாமிக்கு பாதுகாப்பு வழங்குமாறு ஐந்து கட்சிகள் கோரிக்கை

(புதுடில்லி)
ஜனதாக்கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியசுவாமி தமிழ் நாட்டுக்கு செல்லும் போது அவருக்குத் தகுந்த
(4-ம் பக்கம் பார்க்க)

## கொழும்புதுறைமுககடலில் கப்பல் மூழ்கியது

(கொழும்பு)
கொழும்புத் துறைமுகத்தில் சரக்குக் கப்பல் ஒன்று கடலில் மூழ்கியது. அதிலிருந்த 20 மாலுமிகளும் கடலில் குதித்து உயிர் தப்பினர்.
எதியோப்பியாவுக்குச் செல்லவிருந்த ஹரோஸ்என்ற இந்தக் கப்பலில், நேற்று அதிகாலை 856 தொன் றப்பர் ஏற்றப்பட்டிருந்தபோது கப்பல்
(4-ம் பக்கம் பார்க்க)

★ தீர்வு கிட்டவில்லை

# நாடாளு மன்ற தெரிவுக் குழுவிலிருந்து தொண்டமான் இராஜினமா!

## மங்கள முனசிங்கவிற்கு அறிவிப்பு

(கொழும்பு)
நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிலிருந்து இ. தொ. க. தலைவரும் அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் ராஜினமா செய்துள்ளார். இது குறித்து காரசாரமான கடிதம் ஒன்றையும் அவர் தெரிவுக் குழுவின் தலைவர் திரு. மங்கள முனசிங்கவிற்கு அனுப்பியுள்ளார்.

வடக்கு-கிழக்கு இணைப்பை வலியுறுத்தி வந்த இ தொ. கா., தெரிவுக் குழு அதனை நிராகரித்து தனித்தனி மாகாணசபைத் திர்வுத்திட்டத்தை ஆதரித்து இடைக்கால அறிக்கை சமாப்பித்ததை வன்மையாகக் கண்டித்திருந்தது.

மேலும் தெரிவுக்குழுவின் அடுத்த கட்ட நடவடிக்கைகளை தமது கட்சி பகிஷ்கரிக்குமெனவும் அமைச்சர் தொண்டமான் ஏற்கனவே கூறியிருந்
(4-ம் பக்கம் பார்க்க)

## "தமிழ் மக்களை என்றுமே அடிபணிய வைக்க முடியாது"

### தொண்டா கருத்து

(கொழும்பு)
தமிழ் மக்களை என்றுமே அடிபணிய வைக்கமுடியாது. கடந்த ஒரு வருடமாகத் தெரிவுக் குழுவில் பல்வேறு விதத்தில் பேசிப் பார்த்தும் உருப்படியான முடிவு எதற்கும் வரமுடியவில்லை. எனவே அதில் இருப்பதில் பயனில்லை என்று ராஜினமாச் செய்து விட்டேன்.

இவ்வாறு அமைச்சர் தொண்டமான் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிலிருந்து ராஜினமாச் செய்த பின்னர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், வடக்கு-கிழக்கைப் பிரித்து வைக்கும் முயற்சி, நாட்டின் சீரழிவு நிலையை மேலும்
(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் நிலைப்பாட்டிற்கு பெரும் ஆதரவு கிடைக்கும்

### பி. பி. ஸி. விமர்சனம்

(கொழும்பு)
தெரிவுக்குழுவின் நடவடிக்கை 'தமிழ் ஈழம்' கோரி போராடிவரும் விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டிற்கு பெரும் ஆதரவை ஏற்படுத்தலாமென பி. பி. ஸி தெரிவித்துள்ளது.

சகல விதத்திலும் ஏமாற்றப்பட்டுவந்த தமிழ்மக்கள் தெரிவுக்குழு மூலம் மேலும் மோசமான நிலைக்கு தள்ளப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தையே ஏற்க மறுத்த தமிழர்கள் இந்த திட்டம் மூலம் தமிழ் ஈழத்தை தவிர மாற்றுத்திட்டம் இல்லை என்ற நிலைக்கு வந்துள்ளதால் புலிகளுக்கு மேலும் மேலும் பெரும் ஆதரவு கிடைக்குமெனவும் பி. பி. ஸி, தெரிவித்தது. (சி

## யுத்த நிறுத்தம் ஏற்படுத்த அரசு - இராணுவம் பேச்சு?

### சிங்களப் பத்திரிகை தகவல்

(கொழும்பு)
விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை ஒன்றை ஏற்படுத்தும் நோக்கில், வடக்கு-கிழக்கில் யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்த அரசு தீவிரமாக முயற்சித்து வருவதாகச் சிங்களப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

இந்த யுத்த நிறுத்த முயற்சிக்காக, அரசு தற்போது இராணுவத் தலைமைப்பீடத்துடன் பேச்சுக்கள் நடத்தி வருகிறது இதனை எப்படியாவது வெற்றியளிக்கச் செய்யும் முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றதாம்.

வடக்கு-கிழக்கில் யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தி, நிபந்தனையற்ற பேச்சுக்களை
(4-ம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் பதவியை தொண்டா தொடர்வாரா?

(கொழும்பு)
ஆளும் ஐ. தே. க. வின் அமைச்சரவையில் திரு. தொண்டமான் அமைச்சர் பதவியை தொடர்வாரா என்பது குறித்தும் பலத்த சந்தேகம் எழுந்துள்ளது.
(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் கட்சிகளும் ராஜினமா செய்யலாம்

(கொழும்பு)
இ. தொ. கா, நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் இருந்து ராஜினமா செய்ததை அடுத்து ஏனைய தமிழ் கட்சிகளும் ராஜினமா செய்யும் சாத்தியங்கள் இருப்பதாக
(4-ம் பக்கம் பார்க்க)

## தெரிவுக்குழுவின் முயற்சி குழப்பமுற்ற நிலையில்

(கொழும்பு)
நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிலிருந்து அமைச்சர் தொண்டமான் விலகியதனால் குழப்பமடைந்த நிலையில் தெரிவுக்குழு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.
(4ம் பக்கம் பார்க்க)

## தேசிய பாதுகாப்பு நிதி: 29 கோடி ரூபா சேர்ந்தது

(கொழும்பு)
நாட்டின் தேசிய பாதுகாப்பு நிதிக்கு 29 கோடி ரூபா கிடைத்துள்ளதாக ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

இந்த நிதி நாட்டின் பாதுகாப்பு செலவிற்கும், படையினரின் நலன்களுக்கும் செலவிடப்படுமெனவும் தெரிவித்துள்ளார்.

அரசு தேசிய பாதுகாப்பு நிதிக்காக சகல வழிகளிலும் நிதியை திரட்டி வருவதும் தெரிந்ததே. (சி)

## 26 கடற்படை அதிகாரிகள் புதிதாக நியமனம்

(கொழும்பு)
வடக்கு-கிழக்குப் பகுதிகளில் கடமையாற்றுவதற்கென 26 கடற்படை அதிகாரிகள் தமது பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறியுள்ளனர்.

இந்த அதிகாரிகளுடன் 200 கடற்படை வீரர்களும் தமது பயிற்சியை முடித்துக்கொண்டனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழரிடம் பண மோசடி இருவர் கொழும்பில் கைது

(கொழும்பு)
இரகசியப் பொலிசார் எனக் கூறிக்கொண்டு கொழும்பில் அப்பாவித் தமிழர்களிடம் பணம், நகைகள் உட்படப் பெறுமதியான பொருள்களை அபகரித்து வந்த இருவர் பம்பலப்பிட்டி பொலிசாரிடம் சிக்கினார்கள்.
(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### ஆனந்தா கலண்டர்

எல்லா விபரங்களும் அடங்கிய ஆனந்தா பஞ்சாங்கக் கலண்டர் 1993. மலிவு விலை ரூபா 30-00 மட்டுமே. (எ-2696)

### PITAWAKKA PLUS

மதுபானத்தால் ஏற்படும் ஈரல் வியாதிகளுக்கும் வேறு மருந்துகளால் உடலில் ஏற்படும் நச்சுத்தன்மைகளுக்குமாக 9 வகை மூலிகைகள் அடங்கியது. கிடைக்குமிடம்: எஸ் ரி மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-7065)

### விற்பனைக்கு

உர பயக்குகள், சாக்குகள் விற்பனைக்கு உள்ளன தொடர்பு: செயலாளர், அறவழிப் போராட்டக்குழு, த. பெ. இல. 2, கைதடி, நுணாவில், சாவகச்சேரி. (ஏ-2702)

### தவறிவிட்டது

உரும்பராய்ச்சந்திக்கு அண்மையில் புத்தகம் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உரும்பிராயில் அமைந்துள்ள பார்மசியில் (Medi Oucean) இல் கொடுக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி-7091)

### நீமோல்

நீமோல் என்றால் சுகாதாரம். மலசல கூடத்தை "நீமோல்" கொண்டு சுத்திகரியுங்கள் தொற்றுநோய்க் கிருமிகளிலிருந்து பாதுகாக்கிறது. அண்ணா கோப்பிக் கடைகளிலும் கிடைக்கிறது மிக்கவைற். (எ-2708

### வைத்தியம்

நாட்பட்ட காய்ச்சல் அல்சர். வெளிளைத் தழும்புகள், பாலுண்ணிகள், வாதம் போன்றவற்றுக்கு ஹோமியோபதி சிகிச்சை நிரந்தர நிவாரணம் அளிக்கின்றது டாக்டர் எம். வி. தில்லைசந்திரன், 218/5, டலாலிவீதி சுந்தர்மடம். (சி-7090

### ஆண்டு 6 அனுமதி
### ஆண்டு 5 புலமைப்பரிசில்

யாழ் மாவட்ட முன்னணிப் பாடசாலைகளுக்கான ஆண்டு 6 மாதிரி அனுமதிப் பரீட்சை [24-12-92] வியாழனும், ஆண்டு 5 புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை 03-01-93 ஞாயிறும் முற்பகல் 8-00 மணிக்கு நடைபெறும். பதிவு செய்யவும்: புதிய கல்வி நிலையம். 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி 7088)

### அழகுசாதனப் பொருட்கள்

தரமான இமிரேசன் கோல்ட் கவறிங் நகைகள், மணப்பெண்களின் சோடினை நகைகள், தையல், பாடசாலை உபகரணங்கள், எவர்சில்வர் வெளிநாட்டு உள்நாட்டு அழகுசாதனப் பொருட்களை நிதான விலைக்கு மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள ஜெயா அழகு சாதன மாளிகை, 170, மின்சாரநிலைய வீதி. ஜெயா பென்ஸி ஹவுஸ், 160, நவீன சந்தை (உட்புறம்) யாழ்ப்பாணம். (சி-7087)

## வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

---

## இராசி பலன்

23-12-1992

(தமிழுக்கு மார்கழி 08)

**புதன்கிழமை**

அமாவாசை வைகறை 6-25 வரை கேட்டை பி. ப. 2-34 வரை சித்தயோகம் இராகுகாலம் நண்பகல் 12 29 முதல் 1-56 வரை சுபநேரம் மாலை 4-56 முதல் 6-26 வரை அமாவாசை விரதம்.

மேடம், முயற்சி தாமதம், நண்பர் பகை, அநாவசிய செலவு.

இடபம்: குடும்ப விவகாரம் தொழில் கஸ்டம், பணமுடை.

மிதுனம்: புத்திர வழி நன்மை, தொழில் முதலீடு, அதிக வசதி

கடகம்! வெளியூர் செய்தி, தொழில் சிறப்பு, குடும்ப மகிழ்ச்சி.

சிங்கம்: அநாவசிய மனஸ்தாபம், குடும்ப பிரிவு, அலைச்சல்.

கன்னி: தொழில் முடக்கம், அதிகாரிகள் கினம், அவமதிப்பு

துலாம்: தொல்லையில் இருந்து விடுபடல், குடும்ப சுகம், தெய்வசிந்தனை.

விருச்சிகம்: மாமனூர்லாபம் புதிய வருவாய், காரியசித்தி.

தனுசு: சகோதர உதவி, தொழில் முயற்சி, சுபகாரியம்.

மகரம்; தொழில் மாற்றம், வீண்யோசனை, கடன்சுமை.

கும்பம்: மனைவி பகைசெலவு தொழில் லாடம். பயணம்.

மீனம்: கடும் உழைப்பு, கல்விச்செலவு மரியாதை

— ஜோஸ்யர்

---

## ★ வெளிநாட்டவர் மீதான தாக்குதல்களை கண்டித்து
## ஜெர்மனியில் அமைதிப் பேரணி
### 2200 வன்செயல்களில் 17 பேர் பலி, 500 பேர் காயம்

[பேர்லின்]

ஜெர்மனியில் இடதுசாரி தீவிரவாதிகள் வெளிநாட்டவர்கள் மீது நடத்தும் தாக்குதல்களைக் கண்டித்து நேற்று முன்தினம் மூன்று முக்கிய நகரங்களில் 3லட்சப்பேர் மனித சங்கிலி அமைத்து அமைதிப் பேரணி நடத்தினார்கள்.

ஜெர்மனியில் இடதுசாரி தீவிரவாதிகளின் இனவாதத்திற்கு எதிராக நடத்தப்படும் மூன்றாவது அமைதிப் பேரணி இதுவாகும்.

கடந்த ஒருவருடத்தில் மட்டும் ஜெர்மனியில் வெளிநாட்டவர்கள மீது 2200தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகவும் இதில் 17 பேர் உயிரிழந்ததாகவும் 500 பேர்வரை காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இத்தாலியிலும் அண்மைக்காலமாக வெளிநாட்டவர்கள் மீதான தாக்குதல்கள் நடத்தப்பட்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது. (ரி)

## கொழும்பில் பாதுகாப்பு
## 700 பேர் கைதானார்கள்

(கொழும்பு)

நத்தார் பண்டிகையை யொட்டி கொழும்பு நகரில் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாதுகாப்பு ஏற்பாடுகளின் முதல்கட்ட நடவடிக்கையாக எழுநூறு பேர் வரையில் கொழும்பு நகரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த பாதுகாப்பு நடவடிக்கையில் மேலதிக பொலிசார் நகரின் பல பாகங்களிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ரி)

## வெளிவாரி பரீட்சை முடிவு

(திருநெல்வேலி)

போதனைப் பல்கலைக்கழக வெளிவாரி G. A. Q (கலை முதற் தேர்வு) பெறுபேறுகள் ஜனவரி மாதம் வெளியிடப்படும் என பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

92ம் ஆண்டு சித்திரைமாதம் இவர்களுக்கான பரீட்சைகள் நடைபெற்றது வடபகுதியிலிருந்து நூற்றுக்கணக்கானோர் சென்று பரீட்சைக்கு தோற்றியிருந்தனர்.

இவர்களது பெறுபேறுகள் அடுத்தமாத நடுப்பகுதியில் வெளியிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (157)

## போறூட் பிரதிநிதி
## சங்கரத்தைக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கு அண்மையில் விஜயம் மேற்கொண்டிருந்த போறூட் நிறுவன வதிவிடப் பிரதிநிதி கென்றிரீகிலன் சங்கரத்தையில் இயங்கும் அகதி முகாமை கடந்தவாரம் சென்று பார்வையிட்டதுடன் அங்கு அகதிகள் எதிர்நோக்கும் பல்வேறு கஷ்டங்கள் குறித்தும் கலந்துரையாடினார்.

நோர்வே பிரதிநிதியுடன் வடபகுதி திட்ட இணைப்பாளர் சற்குணராசா, சுழிபுரம் சிரேஷ்ட இணைப்பாளர் திரு. கணேசலிங்கம் ஆகியோரும் சென்றிருந்தனர்.

மேற்குறிப்பிடப்பட்ட அகதி முகாமில் 108 குடும்பங்கள் தங்கிருப்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பல அகதி முகாம்களை போறூட் ஸ்தாபனம் நிர்வகித்து வருவது தெரிந்ததே (க)

## புலமைப் பரிசிலில் சித்திபெற்ற
## 7,500 மாணவர்க்கு
### உபகாரப் பணம் வழங்கப்படும்

(மானிப்பாய்)

இவ்வருடம் ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தெரிவுசெய்யப்பட்ட 22,500 மாணவர்களில் 7,500 மாணவர்கள் பிரபல்ய பாடசாலைகளில் கல்வி பயிலவும் உபகாரப்பணத்தைப் பெறவும தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மிகுதி 15000 மாணவருக்கு பிரபல்யபாடசாலைகளில்கல்வி பெற வசதி செய்து கொடுக்கப்படுமென்றும் ஆனால் உபகாரப் பணம் வழங்கப்படமாட்டாது என்றும் பரீட்சை ஆணையாளர் ஆதர்வெதமுல்ல அறிவித்துள்ளார்.

இப்பரீட்சைக்கு நாடெங்கிலுமிருந்து சுமார் மூன்று லட்சம் மாணவர் தோற்றியிருந்தது குறிப்பிடத்தக்கது. (71)

---

யாழ்ப்பாண மாநகரசபை

## இழுவைப் பெட்டிகளுடனான டிராக்டர்களை
## பதிவு செய்தல் - 1993

யாழ்ப்பாண மாநகரசபையினுள் 1993ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட இருக்கும் அபிவிருத்தி வேலைகளில் தமது டிராக்டரை வாடகை அடிப்படையிலோ அல்லது ஒப்பந்த அடிப்படையிலோ ஈடுபடுத்த விரும்பும் டிராக்டர் உரிமையாளர்கள் எதிர்வரும் 31-12-92ம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர் வருடாந்தப் பதிவுக் கட்டணமாக ரூபா. 1000/ ஐ செலுத்தி யாழ்ப்பாண மாநகரசபையுடன் தம்மைப் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேலதிக விபரங்களை மாநகரசபையின் வேலைப் பொறியியலாளரிடம். இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்,

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். 21-12 1992. (ஏ 2707)

---

## நாய்களை வளர்ப்போருக்கான
## அன்பான வேண்டுகோள்

01. உங்கள் உள்ளூராட்சி மன்றத்தில் அனுமதிப் பத்திரம் பெற்று நாய்களை வளர்த்தல் வேண்டும்.

02. நாய்களை வீட்டிலேயே வளர்த்தல் வேண்டும். எந்தச் சந்தர்ப்பத்திலும் உங்கள் நாய்களை வீதிக்குச் செல்லவிடாதீர்கள். வீதியில் காணப்படும் நாய்களை கட்டாக்காலி நாய்களாகக் கருதி அவை உள்ளூராட்சி மன்றத்தினால் பிடிக்கப்பட்டு அழிக்கப்படும்.

03. உங்கள் நாய்களுக்குத் தவறாமல் விசர்நாய்த் தடுப்பூசி போடுவித்துக் கொள்ளுங்கள்.

04. தேவையற்ற நாய்களை அழித்தல் தொடர்பாக உங்கள் உள்ளூராட்சி மன்றத்துடன்தொடர்பு கொள்ளுங்கள்.

05. இவ்வேண்டுகோள்களைக் கடைப்பிடித்து விலைமதிப்பற்ற மனித உயிர்களின் அனாவசிய இழப்புக்களைத் தடுப்பதற்கு ஒத்துழைப்புத் தாருங்கள்.

சுந்தரம் டிவகலாலா
பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

உள்ளூராட்சித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
92-12-21 (எ 2706)

---

## ஒய்வூதிய வயதடையாதோருக்கு
## மாற்றுத் தொழில்கள் வழங்க நடவடிக்கை

(நல்லூர்)

மூடப்பட்ட அரசாங்கத் திணைக்களங்களில் கடமையாற்றிய ஓய்வூதிய வயதை அடையாமல்சேவையை முடித்துக் கொண்டவர்களுக்கு மாற்றுத் தொழில்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இது தொடர்பான சுற்று நிருபமொன்று அண்மையில் யாழ். செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இச் சுற்றுநிருபத்தின்படி இவ்வருட மார்ச் மாதம் 27-ம் திகதிக்குப்பின்னர் சேவையை முடித்தவர்கள் தகவல்களை அனுப்பவேண்டியதில்லை எனவும் அவர்களுக்குச் சலுகை வழங்கப்படாதெனவும் அவர்களுக்கு சலுகைகள் வழங்கப்படாதெனவும் சேவையில் பதிதுவருடத்தையும் பூர்த்தி செய்யாதவர்களுக்கு சேவையைப் பூர்த்தி செய்ய சந்தர்ப்பம் அளிக்கப்படுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தகவல்களை அனுப்புவதற்கான மாதிரி விண்ணப்பப்படிவமும் அச் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (158)

## மருந்து திருட்டு

(பண்டத்தரிப்பு)

சங்கானை அரசினர் வைத்தியசாலை மருந்துக் களஞ்சிய அறை கூரை ஓடு பிரிக்கப்பட்டு முக்கிய மருந்து வகைகள் திருடப்பட்டுள்ளது. (72)

சங்கானையில்

## திருவாசக விழா

(யாழ்ப்பாணம்)

சங்கானை வெள்ளை அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான திருவாசகவிழா, எதிர்வரும் 24ம் திகதி வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

திரு. மு. சிவானந்தன் தலைமையில் நடைபெறும் திருவாசகவிழாவில் திருமதி ம. திருச்சிற்றம்பலம், வித்துவான் க. சொக்கலிங்கம். திரு. இ. சிவதட்சிணாமூர்த்தி ஆகியோரின் சிறப்பு பொற்பொழிவுகளும் மற்றும் சமய நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. (க)

# ரஷ்ய, கிழக்கு ஐரோப்பிய யுத்த விமானங்களை கொள்வனவு செய்வதில் அரசு தீவிர அக்கறை

(நேற்றைய தொடர்ச்சி)

சர்வதேச பாதுகாப்பு ஏடான 'ஜேன்ஸ்' வெளியிட்ட தகவலின் படி 'புக்காரா' ரக விமானங்கள் ஆர்ஜன்ரீனா நிறுவனம் ஒன்றால் தயாரிக்கப்படுகிறது.

இவற்றில் இருவகையான 'ஐ.ஏ 58 ஏ' ரக' ஐ.ஏ 58 சீ ரக 'புக்காரா' விமானங்களே வெற்றியளித்துள்ளன. இதில் 'ஐ ஏ 58 ஏ' புக்காரா விமானத்தையே ஆர்ஜன்ரீனா விமானப்படை முக்கியமாக பயன்படுத்துகிறது.

இந்த வகையான இரு ஆசனங்களை கொண்ட விமானத்தை பயன்படுத்துவது ஆர்ஜன்ரீனாவுக்கு இலகுவானதாக அமைகிறது. இந்த வகையான விமானங்களில் சில உருகுவேக்கும் கொலம்பியாவுக்கும் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

ஆனால் பிரேஸில் தயாரிப்பான 'துர்கானோ' அவ்வளவாக பயன்படுத்தப்படுவதில்லை. பயிற்சிக்காக அமைக்கப்பட்டுள்ள துர்கானோ உள்நாட்டு குழப்பங்களுக்குபயன்படுத்தப்படுகிறது.

'புக்காரா' ரக விமானங்கள் பிரான்ஸ் நாட்டு தயாரிப்பான சக்திமிகு என்ஜின்களை கொண்டுள்ளன. இவ் விமானம் பற்றிய விவாதம் இலங்கை நாடாளுமன்றில் வந்தபோது இலங்கைக்கு ஆயுதங்களையும், இராணுவ தளபாடங்களையும் விற்பனை செய்வதற்கு பிரான்ஸ் தடைவிதித்துள்ளதாக பிரதமர் விஜயதுங்க கூறியுள்ளார். எனினும் இவ்வாறான தகவல்களை பிரான்ஸ் தூதரகம் மறுத்துள்ளது.

மேலும் ஆயுதக்கொள்வனவு எவற்றுக்கும் இலங்கை பிரான்ஸின் உதவியை நாடவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பிரிட்டிஷ் அரசு எதிர்பாராத விதமாக இலங்கை மீதான ஆயுதத் தடையை நீக்கியமை இலங்கைக்கு பெரும் வாய்ப்பாக அமைந்துள்ளது. இதனால் இலங்கை நல்ல தரமான ஆயுதங்களை வாங்க முடியும்.

கடந்த ஜூன் மாதத்தில் பிரிட்டிஷ் தூதர் டேவிட் கிளஸ்ரோனே நாட்டைவிட்டு வெளியேற்றியதன்மூலம் இலங்கை பெரும் ஆயுத நெருக்கடியை எதிர்நோக்கியது. இதனால் கவசவாகன பிரிவு பெருமளவில் பாதிக்கப்பட்டது.

சலாடின் கவசவாகனத்திற்கும் 'பேரட் ஸ்வெட்' ரக வாகனத்திற்கும் பிரிட்டிஷ் தயாரிப்பான ரவைகளும், உதிரிப்பாகங்களும் அவசியம் தேவை.

இதற்கிடையில் அடுத்த வருட முற்பகுதியில் ரஷ்ய தயாரிப்பான 'எம்.ஐ-8' ரக ஹெலிகொப்டர்களை அரசு வாங்கவுள்ளது. இதன் மூலம் விமானப்படையின் தாக்குதல் பலத்தையும் போக்குவரத்து வசதியையும் இலகுவாக்கலாமென கருதப்படுகிறது.

இதற்கான கேள்விப் பத்திரங்களை அரசு கோரியுள்ளதுடன் இந்த கேள்வி கோரல் கடந்த திங்கட்கிழமையுடன் முடிவடைந்தது.

இந்த 'எம்.ஐ-8' ரக ஹெலிகொப்டரின் பல்வேறு வகையான ஹெலிகள் சுமார் 50 நாடுகளில் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மேற்படி ரஷ்ய ஹெலிகொப்டர்களையும், ஆர்ஜன்ரீனாவின் 'புக்காரா' விமானங்களையும் பெறுவதன் மூலம் விமானப்படையின் பலத்தை அதிகரித்து விடுதலைப் புலிகளுக்கு நெருக்கடியை அதிகரிக்கலாமென அரசு வட்டாரங்கள் கருதுகின்றன.

எனினும் 'புக்காரா' விமானம் குறித்து சந்தேகங்கள் எழுந்துள்ளன. ஆனால் ரஷ்ய ஹெலிகொப்டர் குறித்து எந்தவிதமான சந்தேகங்களும் எழவில்லை. ஏனெனில் இந்த வகை ஹெலிகொப்டர்கள் உலகின் பல பாகங்களிலும் குழப்பங்களை அடக்க பயன்படுகின்றதாம்.

இந்த ஹெலிகொப்டர்கள் மாற்றியமைக்கப்பட்டு உலகின் மிகச் சிறந்த தாக்குதல் சக்திகளில் ஒன்றாக உருவாகியுள்ளது.

இந்த ஹெலிகொப்டரை ரஷ்யாவிடமிருந்தும் வேறு ஆயுதங்களை வேறுசில நாடுகளிடமிருந்தும் வாங்குவதற்கு கிழக்கு ஐரோப்பிய நாடுகள் (முன்னாள் வார்சோ நாடுகள்) எதுவித எதிர்ப்பும் தெரிவிக்கமாட்டாதென கூறப்படுகிறது.

ரஷ்யாவிடமிருந்து இந்த ஹெலிகொப்டர்களையும் வேறு ஆயுதங்களையும் வாங்க அரசு மேற்கொண்ட திடீர்முடிவு எதிர்காலத்தில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றமாக அமையுமெனவும் கருதப்படுகிறது.

ரஷ்யாவும், முன்னாள் சோவியத் யூனியனை சேர்ந்த நாடுகளும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளும், ஆயுதக் கொள்வனவை விரும்பும் நாடுகளுக்கு எந்த வகையான ஆயுதங்களையும், வெடிமருந்துகளையும் ஆயுத பிரயோகத்தையும் விற்க தயாராக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இலங்கை அரசு எதிர்காலத்தில் ரஷ்யாவினதும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளினதும்ஆயுதங்களை பெற்று புலிகளுக்கு எதிராக போரிட முடிவு செய்திருப்பதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ)

நன்றி 'சண்டே ஐலண்ட்'

# "வடக்கு-கிழக்கு யுத்தத்திற்கு சிங்களக் கட்சிகளே காரணம்"

## "யுக்திய" ஆசிரியர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

"வடக்கு-கிழக்குப் பகுதிகளில் தொடரும் யுத்தத்திற்கு சிங்கள ஆளும் கட்சிகளே பொறுப்பேற்கவேண்டும்" என்று யுக்திய ஆசிரியர் திரு. சுனந்ததேசப்பிரியா குற்றம் சாட்டியுள்ளார்.

வாராந்தம் 65,000 பிரதிகள் விற்பனையாகும் இந்தப் பத்திரிகையின் ஆசிரியர் மேலும் அப்பேட்டியில் தெரிவித்துள்ளதாவது:

தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்படவேண்டும். அவர்களது எதிர்காலத்தை சிங்கள மக்கள் தீர்மானிக்கவியலாது.

எமது பத்திரிகையூடாக சிங்கள வாசகர்களுக்கு தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு வகையான பிரச்சினைகளையும் வெளிப்படுத்தி வருகிறோம். எமக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமானால் எமது பத்திரிகையூடாக தலைவர் பிரபாகரன் சிங்கள மக்களுக்கு ஏதாவது சொல்லவிரும்பினால் அதனையும் வெளியிடத் தயாராக இருக்கிறோம்.

தமிழ் மக்கள் ஆயுதம் ஏந்தியதால்தான் இந்த யுத்தம் உருவானது. எனவே யுத்தத்திற்கு காரணம் தமிழ்மக்களே என பேரினவாதிகளால் பரப்பப்பட்டுள்ள கருத்திற்கு மாறாக உண்மை அதுவல்ல, சுதந்திரத்திற்கு முன்பிருந்தே தமிழ் மக்கள் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளார்கள். ஆகவே இந்த யுத்தம் ஆரம்பிப்பதற்கு சிங்கள ஆளும் கட்சிகளும் தலைமையுமே பெருமளவான பொறுப்பை ஏற்கவேண்டும்.

தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். ஒரு அரசியல் தீர்வினை முன்வைக்காமல் புலிகளையோ அல்லது தீவிர போக்கையோ ஒருபோதும் முறியடித்துவிட முடியாது." என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரி)

# யாழ். பல்கலைக்கழகத்தில் பண்ணிசை கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் பண்ணிசை கற்கை நெறி அறிமுகப்படுத்தப் படவுள்ளது என்று யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இதற்கான ஒப்புதலை கலைப்பீடமும், பேரவையும் வழங்கியிருப்பதோடு நுண்கலைக்கழகத்தில் பண்ணிசைக்கென தனி அலகு அமைக்கப்பட்டு, நா. வி. மு. நவரத்தினம் இணைப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். எனவும்அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் நீண்டகாலமான இக் கோரிக்கை நிறைவேறியிருப்பது என்பது குறிப்பிடத்தக்கது. (சு)

# இந்து-முஸ்லிம் கலவரம் 30 கோடி ரூபா சொத்துக்கள் நாசம்

(புதுடில்லி)

இராமஜென்மபூமி பாபரி மசூதி பிரச்சினையால் ஏற்பட்ட கலவரத்தில் இந்தியா முழுவதும் 30 கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களுக்குசேதம் ஏற்பட்டுள்ளதாக இந்திய அரசு நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்த அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை இந்தக் கலவரத்தில் 1,119 பேர் உயிரிழந்தனரென்றும், மகாராஷ்டிர மாநிலத்தில் மாத்திரம் 269 பேர் மரணமாகியுள்ளனர் என்றும் அரசு சமர்ப்பித்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளது. (சு)

# இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகராட்சி மன்ற ஊழியர் நலன்புரிச் சங்கம் நடாத்தும் கிறிஸ்து பிறப்பு விழா இன்று 23ம் திகதி புதன்கிழமை காலை 10-00மணிக்கு மாநகராட்சிமன்ற முன்றலில் நடைபெறும்.

★

(யாழ்ப்பாணம்)

நத்தார் தினத்தை முன்னிட்டு 14, இராசாவின்தோட்டம் 'அசெம்பிளி ஒப் ஹோட்' சபையில் இன்று பி.ப. 3-30 மணிக்கு நத்தார் இன்னிசை கீத நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. [சி]

★

(கொழும்புத்துறை)

யாழ் மாநகராட்சி மன்றத்தின் சுகாதாரப் பகுதியினால் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதிய உதவியுடன் நடாத்தப்படும் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான விடுமுறை முதலுதவி பயிற்சி வகுப்புகள் இன்று தொடக்கம் நடைபெறவுள்ளன.

இதில் பங்குகொள்ள விரும்பும் மாணவர்கள் பாடசாலை அதிபர் அல்லது ஆசிரியர்களுடன் யாழ் கச்சேரிக்கு அண்மையில் அமைந்திருக்கும் மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் இன்று காலை 8-30 மணிக்கு முன்னர் தொடர்புகொள்ளலாம். (154-158)

# சுப்பிரமணிய சுவாமிக்கு பலத்த பாதுகாப்பு

(புதுடில்லி)

டாக்டர் சுப்பிரமணிய சுவாமிக்கு ஆபத்திருந்தால் அவருக்கு பிரதமர் அலுவலகம் அளிக்கும் பாதுகாப்பு போல பாதுகாப்பு அளிக்கப்படுமென பிரதமர் நரசிம்மராவ் கூறியுள்ளார்.

இதேவேளை டாக்டர்சுவாமி வெளியிடும் கருத்துக்கள் அவரது சொந்தக்கருத்தெனவும் அவருக்கு தாம் ஆதரவளிக்கவில்லை எனவும் கூறினார்.

தமிழக அரசை கலைக்குமாறு டாக்டர் சுப்பிரமணிய சுவாமி கோரி வருவதால் அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படலாமெனவும் அவரது ஆதரவாளர்கள் கவலை தெரிவித்து வருகிறார்கள். (சி)

# அயோத்தி பாபர் மசூதியை இந்துக்கள் இடிக்கவில்லை

## பி. ஜே. பி. அறிக்கை

(புதுடில்லி)

பாபரி மசூதியை இந்துக்கள் இடிக்கவில்லையென்றும் சமூக விரோதிகளே இதனை இடித்தார்கள்என்றும் பாரதீய ஜனதா கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாபரி மசூதி இடிக்கப்பட்டபோது இரகசியமாக எடுக்கப்பட்ட வீடியோ படம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

இந்தப் படத்தினைப்பார்வையிட்ட பின்னர் வெளியிடப்பட்ட அறிக்கையிலே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆறு மணித்தியாலயத்திற்கு திரையாகும் இந்த வீடியோ காட்சிகளின்படி மசூதியை ஆயிரக்கணக்கான இந்துக்கள் இடிக்கவில்லை என்றும் நூற்றுக்கணக்கான சமூக விரோதிகளே இடித்தார்கள் என்றும் பி. ஜே. பி. தெரிவித்துள்ளது.

இதேவேளை அரசுக்கு எதிராகஒரு சமயப்போர் நடத்துவோம் என்றும் பி. ஜே. பி. யினர் எச்சரித்துள்ளனர். (பி)

# தமிழீழ மீட்பு நிதி சேகரிக்கப்படும் இடங்கள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மீட்புநிதி பின்வரும் இடங்களில் 27ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பெற்றுக் கொள்ளப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் காரைநகர், வேலணை, நல்லூர், கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தோர் காலை 8-30மணி தொடக்கம் 10-30 மணிவரையும்-

உடுவில், சண்டிலிப்பாய், சங்கானை, தெல்லிப்பளை, காரைநகர் பகுதியை சேர்ந்தோர் காலை 11-00 மணி தொடக்கம் 12-00 மணிவரையும்-

சாவகச்சேரி, பச்சிலைப்பள்ளியைச் சேர்ந்தோர் மாலை 2 00மணி தொடக்கம் 3-00 மணிவரையும்-

கரவெட்டி, பருத்தித்துறை வடமராட்சி கிழக்குப் பகுதிகளைச்சேர்ந்தோர் மாலை 4-00 மணிதொடக்கம் 5 00 மணிவரையும் தமிழீழ மீட்புநிதியைச் செலுத்தலாம் என தமிழீழ மீட்புநிதிப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (க)

# உரங்கள் இறக்கப்படுகிறது

(நெல்லியடி)

சில மாதங்களுக்கு முன்னராக, காங்கேசன்துறையில் களஞ்சியப் படுத்தப்பட்டிருந்த கெயர் ஸ்தாபனத்திற்கான உரவகைகள் மரீன் கப்பல் மூலம் அங்கிருந்து எடுத்துவரப்பட்டு பருத்தித்துறை துறைமுகத்தில் இறக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

நெற்பயிருக்கும் மேட்டுப் பயிருக்குமான, இவ்உரங்கள் இங்கு இறக்கப்படுகிறது. (160)

வடக்கு—கிழக்கில்

# தொடரும் யுத்தத்தினால் சிறுவர் மரணம் அதிகரிப்பு

## எட்டு லட்சம் சிறுவர் பாதிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பகுதியில் நடைபெறும் யுத்தத்தினால் சிறுவர்களின் மரணம் அதிகரித்து வருவதாக ஐ நா. சிறுவர் நலனுக்கான 'யுனிசேவ்' நிறுவனத்தின் ஆண்டு அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி யுத்தத்தினால் வடக்கு-கிழக்குப் பகுதியில் 8 லட்சத்துக்கும் மேற்பட்ட சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 35 வீதமான சிறுவர் போஷாக்கின்மையால் நலிவுற்று வாழ்கின்றார்கள்.

இப்பகுதிகளில் யுத்த அனர்த்தங்களினால் தற்போது பிறக்கும் குழந்தைகளும் பெரும்பாலும் போஷாக்கின்மையால் நலிவுற்று பிறக்கின்றார்கள்.

பல நூற்றுக்கணக்கான சிறுவர்கள் இந்த யுத்தத்தினால் தாய், தந்தையர்களையும், உற்றார், உறவினர்களையும் இழந்து அநாதைகளானதினால், பசிக் கொடுமைக்குள்ளாகிப் பிச்சை எடுத்து வருகின்றார்கள். பல சிறுவர்கள் அங்கவீனமுற்றும் உள்ளனர். இவ்வாறு பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு இலங்கை அரசு உருப்படியான எந்த ஒரு புனரமைப்பு நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (வி)

## பெண்ணின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்திய சாலைக்கு அருகிலுள்ள தாதிகள் பயிற்சிக் கல்லூரிக்கு முன்பாக உள்ள வாய்க்காலில் இருந்து இனம் தெரியாத பெண்ணின் சடலம் ஒன்று மீட்கப்பட்டது.

வைத்தியசாலை ஊழியர்கள் தமிழீழக் காவல்துறையினரின் உதவியுடன் மேற்படி பெண்ணின் சடலத்தை மீட்டனர். (59-72-158)

## அநுராதபுரம் பகுதியில் இரு தமிழ் இளைஞர் கைது

(கொழும்பு)

அநுராதபுரம் பகுதியில் வைத்து இரு தமிழ் இளைஞர்கள் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்விருவரும் மீனவர் வேடத்தில் நடமாடியதாகவும் 1990ல் இடம்பெற்றதாக் குறக் சம்பவங்களுக்கும் இவர்களுக்கும் தொடர்புகள் இருப்பதாகவும் பொலிசார் கூறியுள்ளனர். (சி)

மக்களவையிலிருந்து

## பி. ஜே. பி உறுப்பினர்கள் நேற்று வெளிநடப்பு

(புதுடில்லி)

பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர்களான எல். கே. அத்வானியும், முரளி மனோகர் ஜோஷியும் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டதைக் கண்டித்து மேற்படி கட்சியின் உறுப்பினர்கள் நேற்று மக்களவையிலிருந்து கேள்வி நேரத்தின்போது வெளிநடப்புச் செய்துள்ளனர்.

இக்கட்சியின் துணைத் தலைவர் மக்களவையில் நேற்று உரையாற்றும்போது தங்கள் கட்சித் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருப்பது கவலை தரும் விடயம் என்றும் இது ஒரு அரசியல் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒரு நடவடிக்கை என்றும் தெரிவித்தார். (க)

## மரண அறிவித்தல்

### திருமதி இராசமணி இராமலிங்கம்

வீமன்காமம் வடக்கு தெல்லிப்பளையை பிறப்பிடமாக கொண்டவரும் தற்போது சிவகுமாரன் வீதி உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய திருமதி இராசமணி இராமலிங்கம் 22-12-92 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார். இவர் இளைப்பாறிய ஆசிரியர் இராமலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் காலம் சென்ற மூத்ததம்பி தம்பதிகளின் புதல்வியும், காலம்சென்றவர்களாகிய திருமதி செல்லையா நாகம்மா, திருமதி பொன்னம்பலம் ருக்குமணி, திரு. சிவசம்பு ஆகியோரின் அன்புச்சகோதரியும், இராமநாதன் (இளைப்பாறிய ஆசிரியர்) கனகலிங்கம் (பொறியிலாளர்) நடராசா (ஐக்கிய நாட்டுச் சபை - கனடா) அம்பிகைபாகன் (அம்பிகா ஸ்ரோஸ்) ஆகியோரின் மைத்துனியுமாவர். அன்னாரின் இலத்தில் ஈமைக்கிரியைகள் இன்று புதன்கிழமை பி. ப. 3 மணியளவில் நடைபெற்று உரும்பிராய் இளங்காட்டு மயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்களை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
நா. கனகலிங்கம்
(மைத்துனர்)

சிவகுமாரன் வீதி.
உரும்பிராய் கிழக்கு.

(சி-7093)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் கிருபானந்தராசா, யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1992ம் ஆண்டு டிசம்பர் மாதம் 23ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a New Paper at the General Post Office. Sri Lanka under Licence Number B/10336/8

## இன்று குமண வருகிறது

(நல்லூர்)

திருகோணமலைத் துறைமுகத்தில் தரித்து நின்ற குமண கப்பல், இன்று பருத்தித்துறைக்கு வந்து சேருமென எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கப்பலில் 174 தபாற் பொதிகள் மட்டுமே எடுத்து வரப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இன்று வந்து சேரும் இக்கப்பலில் 2080மெற்றிக்தொன் மா 300 மெற்றிக் தொன் அரிசி, 255 மெற்றிக் தொன் சீனி ஆகியனவும எடுத்து வரப்படுகின்றன. (158)

## விமான விபத்தில் 157 பேர் பலி

(திரிபொலி)

லிபிய விமானம் ஒன்று நேற்று லிபியாவில் தரையிறங்கும் போது விபத்துக்குள்ளாகியதில் அதில் பயணம் செய்த 157 பேரும் பலியாகிவிட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை நேற்றுமுன்தினம் போர்த்துக்கல் தென் பகுதியில் விபத்துக்குள்ளான விமானத்திலிருந்த 340 பயணிகளில் 50 பேர் மட்டுமே இறந்துள்ளதாகவும், 120 பேர படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கபபடுகிறது. (வி)

### யுத்த நிறுத்தம்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தப் புலிகள் தயாராக இருப்பதாகப் புலிகளின் முக்கியஸ்தர் திரு. லோறன்ஸ் திலகர் பாரிஸிலிருந்து விடுத்த அழைப்பை அடுத்தே, அரசு யுத்த நிறுத்தத்திற்கும், பேச்சு வார்த்தைக்கும் முயற்சித்து வருவதாகவும் அந்தச் செய்தி மேலும் தெரிவித்துள்ளது. (சி)

### கொழும்பு
(1-ம பக்கத் தொடர்ச்சி)

கடலில் மூழ்கியது. இந்த றப்பரின பெறுமதி 3 கோடியே 10 லட்சம் ரூபாவாகும் எனத் தெரிவிக்கப்பட்டது.

720 தொன் எடையுள்ள இந்தக் கப்பலின் ஒரு பகுதி நீரில் அமிழ்ந்துள்ளது. இக்கப்பலை மீட்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன (ரி)

### 26 கடற்படை
(1ம் பக்கத் தொடர்ச்சி)

திருகோணமலையில் உள்ள கடற்படைத் தளத்தில் இவர்கள் தமது பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறியுள்ளனர்.

இவர்கள் வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்கு விரைவில் அனுப்பி வைக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ரி)

## 4 மூடை பற்றறிகள் வவுனியாவில் பிடிபட்டது

(வவுனியா)

வட பகுதி சென்ற லொறி ஒன்றிலிருந்து, 4 மூடை பற்றறிகள் தாண்டிக்குளத்தில் வைத்து மீட்கப்பட்டுள்ளனவாம்.

15 லட்சம் ரூபா பெறுமதியான இந்த பற்றறிகள், வேறு பொருட்களுடன சேர்த்து வட பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்டபோதே, தாண்டிக்குளத்திற்கு அப்பாலுள்ள தடை முகாம் ஒன்றில் வைத்துக் கண்டுபிடிக்கப்பட்டதாம்.

இதையடுத்து லொறிச் சாரதியும், சிளினரும் கைது செய்யப்பட்டுள்ளனராம். (சி)

### தமிழ் கட்சிகளும்
(1ம பக்கத் தொடர்ச்சி)

கூறப்படுகிறது.

வடக்கு-கிழக்கு இணைப்பை வலியுறுத்திவரும் தமிழ்கட்சிகள் தெரிவுக்குழு முன் வைத்துள்ள தீர்வை நிராகரித்துமுள்ளன.

இதனால் தெரிவுக்குழு மீது நம்பிக்கையிழந்துள்ள தமிழ் குழுக்கள் அமைச்சர் தொண்டமன் ராஜினமா செய்தது போல தெரிவுக்குழுவிலிருந்து விலகலாம் எனவும் எதிர்பார்க்கப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (சி)

### சுப்பிரமணியசுவாமி
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு வழங்க வேண்டுமென்று இந்தியாவிலுள்ள ஐந்து கட்சிகள் பிரதமர் நரசிம்மராவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது

தற்போது புதுடில்லியில் தங்கியிருக்கும் டாக்டர் சுப்பிரமணியசுவாமி தமிழ் நாட்டுக்கு மீண்டும் திரும்பிச்செல்லும் போது அங்கு அவருக்கு அ. தி. மு. க தொண்டர்களினால் அச்சுறுத்தல்கள் ஏற்படக்கூடுமென்பதனால் அவருக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமென்று ஐந்து கட்சிகளின் தலைவர்கள் பிரதமரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள். [வி]

### தமிழக அரசை
[1-ம் பக்க தொடர்ச்சி]

ஆர்ப்பாட்டத்தை நடாத்தினார்கள்.

தமிழகத்தின் பல பகுதிகளில் அ. தி. மு. க தொண்டர்கள் வர்த்தக நிலையங்களை மூடச்செய்தும், வாகனங்கள் மீது சரமாரியான கற்களை வீசியும் வாகனப் போக்குவரத்தை தடை செய்துள்ளனர்.

தமிழக அரசு கலைக்கப்படும் சாத்தியக்கூறுகள் தென்படுவதனாலேயே இச்செயல்களில் அ. தி. மு. க. தொண்டர்கள் ஈடுபட்டதாகவும், பிரதமர் நாசிம்மராவுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு எதிராக அ. தி. மு. க. வாக்களித்த போதிலும், லோகசபையில இந்த தீர்மானத்தை அ. தி. மு. க. உறுப்பினர்கள் மறைமுகமாக ஆதரித்து உரை நிகழ்த்தியமை மத்திய அரசுக்கு பெரும் சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

### தீர்வு கிட்டவில்லை!
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தார்.

தெரிவுக் குழுவிலே திரு. தொண்டமான கடந்த வருடம் தீவிரமாக ஈடுபாடு காட்டினார். இதற்காக நான்கு அம்சத் திட்டம் ஒன்றையும் சமர்ப்பித்திருந்தார். அத்திட்டத்தில் வடக்கையும் கிழக்கையும் நிரந்தரமாக இணைக்க வேண்டும் என்பதும் முக்கியமானது.

1987-ல் உருவான இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் கூட இவ்விரு மாகாணங்களும் தற்காலிகமாக இணைக்கப்பட்டன. ஆனல் தெரிவுக் குழு இதனை நிராகரித்தது.

இதன் மூலம் திரு. தொண்டமானின் 4ம் அம்சத் திட்டமும், இலங்கை-இந்திய ஒப்பந்தமும் தெரிவுக்குழுவினால் நிராகரிக்கப்பட்டுவிட்டன.

இதனையடுத்தே திரு. தொண்டமான் தெரிவுக்குழுவிலிருந்து ராஜினமாச் செய்துள்ளார். (இ)

## 80 வீத கைதிகள் தீவிர ஜே.வி.பி.யினர்

(கொழும்பு)

ஜே.வி.பி. என்ற சந்தேகத்தின் பேரில் தற்போது சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளவர்களில் 80 வீதமானோர் அதி தீவிர ஜே. வி. பி. யினர் என நீதியரசர் ஜெயலத் கூறியுள்ளார்.

தற்போது பூஸா, பெலவத்த தடுப்பு முகாம்களில் 2000க்கும் மேற்பட்ட ஜே. வி. பி. யினர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 80 வீதமானோர் அதிதீவிரவாதிகள் எனவும் நீதியரசர் கூறியுள்ளார்.

இவர்கள் அனைவருக்கும் ஆயுள்கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

### தமிழ் மக்களை
(1-ம் பக்கத்தொடர்ச்சி)

மோசமாக்கிவிடும். சிங்களப் பெரும்பான்மைத் தலைவர்களும், தமிழ்ச் சிறுபான்மைத் தலைவர்களும் கருத்தளவில் இணையமுடியாது இருப்பது. பிரிவினைவாதப போக்கை மேலும் பலப்படுத்திவிடும் என்றும் எச்சரித்தார். (சி)

### அமைச்சர்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவுக்குழுவிலிருந்து விலகியதால் அமைச்சர் பதவியை தொடர்வீர்களா? அல்லது அதனையும் ராஜினமா செய்வீர்களா என திரு. தொண்டமானை பி.பி.ஸி நிருபர் கேட்ட போது, அது வேறு விடயம் இது வேறு விடயமென்றும் அமைச்சர் பதவி அரசுடனும் அமைச்சரவையுடனும் சம்பந்தப்பட்டதெனவும் இது நாடாளுமன்ற தெரிவுக்குழுவுடன் சம்பந்தப்பட்டது என்றும் கூறினர்.

மேலும் தான் தொடர்ந்தும் அமைச்சரவையில் இருக்கப்போவதாகவும் கூறினர். (சி)

### தெரிவுக் குழுவின்
(1-ம பக்கத்தொடர்ச்சி)

தொண்டமான் விலகினால் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் சகல முயற்சிகளும் தோல்வியடையலாம் என்று பி பி ஸி தெரிவித்தது.

தெரிவுக்குழுவின் முக்கிய உறுப்பினரான திரு. தொண்டமானின் விலகலைத் தொடர்ந்து இக்குழுவில் அங்கம் வகிக்கும் தமிழ்கட்சிகளும் விலகலாம் என்று எதிர்பார்க்கப்படுவதால் தெரிவுக் குழுவின் முயற்சிகள் தோல்வியடையும் சாத்தியம் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ரி)

### தமிழரிடம்
(1-ம்பக்கத் தொடர்ச்சி)

போலி அடையாள அட்டைகளைக் காண்பித்து மேற்படி நாடகத்தை இருவரும் நீண்ட காலமாக நடாத்தி வந்ததாகவும், வடக்கு-கிழக்கிலிருந்து சென்ற தமிழர்களிடமே தமது கைவரிசையை இவர்கள் காட்டி வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இருவரிடமும் பணம் மற்றும் பெறுமதியான பொருட்களைப் பறிகொடுத்தோர் இது பற்றி பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்திருந்தாலும், செய்யாவிட்டாலும் தம்மை வந்து சந்திக்கும்படி குற்றப் புலனாய்வு பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார். (க)